**செய்தி வெளியீடு எண்: 406** **நாள்: 25.06.2018**

# செய்தி வெளியீடு

**தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் நடத்தும் பட்ட மற்றும் பட்டய படிப்புகளில் சேர ஏப்ரல் 16 முதல் விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன**

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர் அறிவிப்பு

சென்னை – 5, தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை), எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) பட்டப்படிப்புகள் மற்றும் பிஜி.டி.எல்.ஏ (தொழிலாளர் நிர்வாகத்தில் முதுநிலை மாலை நேர பட்டயப்படிப்பு), D.L.L. & A.L. (தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும் வார இறுதி பட்டய படிப்பு)களும் நடத்தப்பட்டு வருகின்றன. பி.ஏ. (தொ.மே), எம்.ஏ. (தொ.மே) படிப்புகள் சென்னை பல்கலைகழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பி.ஜி.டி.எல்.ஏ. மற்றும் டி.எல்.எல் படிப்புகள் தமிழக அரசின் அங்கீகாரத்துடன் நடைபெற்று வருகிறது.

பி.ஏ.(தொ.மே), எம்.ஏ (தொ.மே) மற்றும் பி.ஜி.டி.எல்.ஏ. ஆகிய பட்ட / பட்டய படிப்புகள் தொழிலாளர் நல அலுவலர் பதவிக்கு பிரத்யேக கல்வித்தகுதியாக தமிழ்நாடு தொழிற்சாலைகள் தொழிலாளர் நல அலுவலர்கள் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளது. இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்களுக்கு பல்வேறு தொழில் நிறுவனங்களில் மனிதவள மேம்பாட்டுத்துறையில் அதிகளவில் வேலைவாய்ப்புகள் உள்ளன. இக்கல்வி நிலைய மாணவர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களில் மனிதவளத் துறையில் பணிபுரிந்து வருகிறார்கள்.

மேலும், தமிழ்நாடு அரசு தொழிலாளர் துறையில் தொழிலாளர் அலுவலர் (தற்போது தொழிலாளர் உதவி ஆணையர்) மற்றும் தொழிலாளர் உதவி ஆய்வர் பதவிகளுக்கு பி.ஏ.(தொ.மே), எம்.ஏ (தொ.மே) மற்றும் பி.ஜி.டி.எல்.ஏ. ஆகிய பட்ட / பட்டய படிப்புகள் தகுதியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏதேனும் ஒரு பட்டம் பெற்ற மாணவர்கள் முதுநிலை பட்ட மற்றும் பட்டயப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்பவர்கள் மதிப்பெண் அடிப்படையில் அரசு விதிகளின்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். விண்ணப்பங்கள் **16.4.2018** முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| எம்.ஏ. / பி.ஜி.டி.எல்.ஏ / டி.எல்.எல். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறப்படும் இறுதி நாள் | – **03.07.2018** மாலை 5 மணி வரை |
| விண்ணப்ப கட்டணம் (நேரில்) | – **ரூ.200/–** |
| for SC / ST<br>(சாதிச்சான்றிதழ் நகல் தாக்கல் செய்யவேண்டும்) | - **ரூ.100/-** |

தபாலில் பெற விரும்புவோர், விண்ணப்ப கட்டணம் + தபால் கட்டணமாக ரூ.50/– கூடுதலாக அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலை “The Director, Tamilnadu Institute of Labour Studies, Chennai - 5” என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு : ஒருங்கிணைப்பாளர் (சேர்க்கை)
முனைவர் இரா,ரமேஷ்குமார், இணை பேராசிரியர்
Mob. No. 9884159410
தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்
எண்.5 காமராசர் சாலை, சென்னை – 600 005
தொலைபேசி எண்.044 – 28440102 / 28445778
email: tilschennai@tn.gov.in

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**